BSNLEU

# தொலை தொடர்புத் தோழன்


ஆசிரியர் : S. செல்லப்பா

நவம்பர் & டிசம்பர் – 2008 இதழ் 83


# தேர்தல் சிறப்பிதழ்

சாதித்தவைகளுக்காக
மட்டுமல்ல....
மேலும் மேலும்
சாதிக்க....




BSNLஐ காக்க....

BSNLஐ வளமாக்க....

BSNLஐ போட்டியில் முதலிடத்திற்கு கொண்டுவர....

ஊழியர் நலன் காக்க....

**BSNLEUவின் செல்போன் சின்னத்திற்கு வாக்களிப்பீர்**

**UNITED FORUM OF BSNL UNIONS**
**BSNLEU, TEPU, AIBCTES**

# மீண்டும் வெற்றி நிச்சயம்

BSNLல் நான்காவது சங்க அங்கீகாரத் தேர்தல் 2009, ஜனவரி 21ம் தேதி நடைபெறுகிறது. வாக்குகள் எண்ணும் பணி 23ம் தேதி நடைபெற்று தேர்தல் முடிவுகள் 24ம் தேதி வெளியிடப்படும். போட்டியிடும் சங்கங்களின் எண்ணிக்கை கடந்த தேர்தலில் 8ஆக இருந்தது இந்த தேர்தலில் 14ஆக உயர்ந்துள்ளது. அவை

(1) BSNL Employees Union (BSNLEU)

(2) Telecom Employees Progressive Union (TEPU)

(3) All India Backward Class Telecom Employees Sangathan (AIBCTES)

(4) National Federation of Telecom Employees - BSNL (NFTE BSNL)

(5) National Union of BSNL Workers (FNTO)

(6) Bagujan Telecom Union of BSNL (BTU BSNL)

(7) BSNL Employees Congress (BSNLEC)

(8) BSNL Employees Sangh (BSNLES)

(9) BSNL Mazdoor Sangh (BSNLMS)

(10) BSNL Workers Rashtriya Union (BSNLWRU)

(11) Bharath Telecom Employees Union BSNL (BTEU BSNL)

(12) BSNL Association of Telecom Mechanic (BSNL ATM)

(13) BSNL National Telecom Staff Union (BSNL NTSU)

(14) National Pattali Employees Welfare Association (BSNL PEWA)

இவற்றில் BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையில் முதல் மூன்று சங்கங்களும் NFTE BSNL தலைமையில் அடுத்த ஏழு சங்கங்களும் கூட்டணி அமைத்துப் போட்டியை சந்திக்க உள்ளன. அகில இந்திய அளவில் 2,43,000 வாக்காளர் களும் தமிழகத்தில் 19,309 வாக்காளர் களும் உள்ளனர்.

இந்த தேர்தலிலும் BSNLEUன் செல்போன் சின்னத்திற்கும் NFTE BSNLன் இணைந்த கரங்களுக்கும்தான் பிரதான மான போட்டி. கடந்த மூன்று தேர்தல் களைப் போலவே இந்த தேர்தலிலும் அதிக வாக்குகளைப் பெறும் ஒரே சங்கத்திற்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படும்.

கடந்த தேர்தலில் BSNLEU கூட்டணி யில் இருந்த FNTO சங்கமும் ராஷ்ட்ரிய யூனியனும் நேர்மையற்ற காரணங்களைச் சொல்லி விலகிவிட்டனர். FNTO சங்கம் தனது தலைமையில் ஒரு கூட்டணி என்று ஆரம்பத்தில் சொல்லியது. ஏற்பதற்கு யாரும் தயாரில்லை என்ற போது NFTEயுடன் சேர்ந்து விட்டனர்.

NFTEக்குப் பின்னால் சென்றுவிட்ட FNTO சங்கம் 'செல்போன்' சின்னத்தை நமக்குத் தரக்கூடாது என்று முடக்கப் பார்த்தனர். ஆனால் தேர்தல் கமிஷனின் வழிகாட்டுதலைப் பெற்ற நிர்வாகம், நமது வெற்றிச் சின்னமாம் 'செல்போன்' சின்னம் BSNL ஊழியர் சங்கத்திற்குத்தான் சொந்தம் என அறிவித்து விட்டது. இதற்கு எதிராக அது தொடுத்த வழக்கையும் பாட்டியாலா கோர்ட் தள்ளுபடி செய்து விட்டது. தனது 'ஆன்மாவை' தொலைத்து NFTE சங்கத்திடம் சென்ற FNTO சங்கம் 'செல்போன்' சின்னத்தை நம்மிடம் இழந்து விட்டது. இந்தத் தேர்தலிலும் BSNL

Employees Union தலைமையிலான United Forumத்தின் சின்னம் 'செல்போன்' சின்னம்.

ஐம்பது ஆண்டு காலம் அங்கீகாரம் பெற்றிருந்த NFTE, FNTO சங்கங்கள் ஊழியர்களுக்கு எந்த ஒரு நன்மையையும் செய்யாமல், அரசிடம் சேர்ந்து கொண்டு ஊழியர்களுக்கு எதிராக பல நிலைபாடு களை எடுத்தனர். ஆனால் BSNL Employees Union தலைமையிலான United Forum கடந்த நான்கு ஆண்டுகால அங்கீகாரத்தில் ஊழியர்களுக்கு பல நன்மைகளை செய்ததோடு அரசின் ஊழியர் விரோத, பொதுத்துறைக்கு எதிரான கொள்கைகளை எதிர்த்துப் போராடி தடுத்து நிறுத்தி வந்துள்ளது. வாராது வந்த மாமணியாய் BSNLEU தலைமையிலான கூட்டணியின் அங்கீகாரத்தின் காரணமாக, பெற்ற பயன்களை எண்ணிப் பார்த்து நாடு முழுவதும் BSNL ஊழியர்கள் அணி அணியாய் நமது BSNL ஊழியர் சங்கத்தில் சேர்ந்து வருகின்றனர். முதல் அங்கீகாரத் தேர்தலின்போது 89,000 வாக்கு களைப் பெற்றிருந்த BSNL ஊழியர் சங்கம், ஒரு லட்சத்து நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட சங்கமாக இன்று வளர்ந்துள்ளது.

எட்டு சங்க கூட்டணி என்று வாய்ஜாலம் செய்யும் NFTE சங்க கூட்டணியின் இன்றைய நிலை என்ன?

கடந்த ஜுலை மாதத்தில் அனைத்து சங்கங்களுக்கும் சந்தா பிடித்துத் தரப்படும் என நிர்வாகம் நிலை எடுத்ததனால் அனைவரும் உறுப்பினர்களிடம் படிவம் வாங்கினர். அதன் விவரம் :

மொத்தமுள்ள Non-Executive ஊழியர்கள் : 2,43,000

BSNL ஊழியர் சங்கம் (தனியாக) : 1,35,158

(இது போக disputed listல் உள்ளவர் களின் 10,000 பேர் நமது உறுப்பினர்கள்)

NFTE BSNL சங்கம் : 51,088

FNTO : 19,421

முதல் அங்கீகாரத் தேர்தலில் 1,05,209 வாக்குகளைப் பெற்ற NFTE BSNL சங்க பலம் தற்போது பாதியாக குறைந்துள்ளது. 40,215 வாக்குகளைப் பெற்றிருந்த FNTO சங்கத்தின் நிலைமையும் அதேதான். BSNLES என்ற அவர்களது கூட்டணிச் சங்கம் வெறும் 1536 வாக்குகளையும், BTU சங்கம் 329 வாக்குகளை மட்டுமே கடந்த தேர்தலில் பெற்றிருந்தது. தமிழகத்தில் பெற்றிருக்கும் மொத்த வாக்குகள் 6 மட்டுமே. இவர்களெல்லாம் சேர்ந்து மெகா கூட்டணியாம்; வெற்றி பெறப் போகிறார் களாம். மண்கோட்டையை நம்பி மனக் கோட்டை கட்டுகிறார்கள்.

அற்புதமான பதவி உயர்வு உள்ளிட்ட நூற்றுக்கணக்கான கோரிக்கைகளில் வெற்றி பெற்று ஊழியர்களுக்கு கொடுத்துள்ள சங்கம் BSNL ஊழியர் சங்கம். பங்கு விற்பனை என்ற அரசின் முடிவு தலைதூக்கும் போதெல்லாம் தடுத்து நிறுத்திய சங்கம் BSNL ஊழியர் சங்கம். ஊழியர்கள் உபரி என்று சொல்லி VRS / CRS திட்டத்தை நிர்வாகம் முன்வைக்கும் போதெல்லாம் அவற்றை முறியடித்த சங்கம் BSNL ஊழியர் சங்கம். BSNLஐ பாது காக்க, ஊழியர்களின் உரிமைகளை மேலும் வென்றடைய BSNLல் உள்ள தொழிலாளர்கள் வரும் தேர்தலிலும் BSNLEU சங்கத்தை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் மீண்டும் வெற்றி பெறச் செய்வார்கள் என்பது நிச்சயம்.

**நம்மை வாழவைக்கும் 'BSNL Employees Unionக்கு செல்போன் சின்னத்தில் வாக்களிப்பீர்.**

# யார் காரணம்.....?

அக்டோபர் 2000ல் BSNL நிறுவனம் உருவாக்கப்பட்ட போது, அதன் நிதியாதாரத்தை பலப்படுத்தவும், தனியார் போட்டியை சமாளிக்கவும், அதற்கு எல்லாவிதமான உதவிகளும் செய்யப்படும் என்று மத்திய அரசு உறுதி அளித்தது.

ஆனால் சொன்னது ஒன்று, நடந்தது வேறு. BSNL, கிராமப்புறங்களில் கொடுத்து வரும் சேவையில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட கொடுக்கப்படும் ADC கட்டணங்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்பட்டு ஏப்ரல் 2008 முதல் நிறுத்த திட்டமிடப்பட்டது. USO நிதியிலிருந்து BSNLக்கு வரவேண்டிய நிதியும் தடுக்கப்பட்டது. அந்த கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக, BSNL நிறுவனம் வருடாந்திர லைசென்ஸ் கட்டணம், டிவிடெண்ட் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தி இதுவரை நம்மிடமிருந்து பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் வசூலித்துள்ளது. அரசு, தனியார் கம்பெனிகளுக்கு பல்லாக்கு தூக்கும் TRAI-ம் அரசும் சேர்ந்து இப்படி BSNL நிறுவனத்தை நலிவடையச் செய்யும் செயல்கள் கடந்த ஆண்டுகளில் அடுக்கடுக்காய் நடந்தது.

ஆரம்பத்திலேயே, அரசின் இந்த BSNL விரோத நடவடிக்கைகளில் கறாராக தலையிடாமல், NFTE ஒதுங்கியிருந்தது.

மக்கள் வரிப்பணத்தில் மூலதனம் போட்டு இயங்கி வரும் நமது BSNL பொதுத்துறையை இந்த அழிவிலிருந்து காப்பாற்ற BSNLEU தலையிட்டது. BSNLன் நிதியாதாரத்தை பலப்படுத்துவது, நவரத்னா அந்தஸ்து கொடுப்பது, IPO கைவிடுவது உட்பட முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து பிப்ரவரி 26 (2008)ல் JF சார்பாக வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. 19.2.2008 அன்று DoT Secretary முன்னிலையில் நடந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

இந்த போராட்ட அறிவிப்பின் பலனாக சில முன்னேற்றங்களை காண முடிந்துள்ளது. தற்போது Fixed line (basic phones) இணைப்புகளுக்கு லைசென்ஸ் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்துள்ளது மத்திய அரசு. நாட்டில் மொத்தம் உள்ள Fixed Lineல் 90%க்கு மேல் வைத்துள்ள BSNL நிறுவனத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1200 கோடிக்கு மேல் மிச்சப்படுத்தியுள்ளது இந்த உத்தரவு.

அதே போல் ADC கட்டணத்தை கைவிட்டதால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட ஆண்டுக்கு ரூ. 2000/- கோடி நிதியுதவி செய்ய DoT ஏற்றுக் கொண்டுள்ளது. BSNLக்கு நவரத்னா அந்தஸ்து கொடுப்பதற்கு DPEக்கு பரிந்துரை செய்து, சம்பந்தப்பட்ட உயர்மட்டக் குழுவிடம் (Apex Body) தற்போது ஆலோசனையில் உள்ளது. விரைவில் சாதகமான முடிவு வர உள்ளது.

அதே போன்று BSNLலின் சொத்தான "காப்பர் கேபிளை" தனியாருடன் பங்கு போட வேண்டும் என்ற TRAIன் பரிந்துரைகளை முறியடித்த பெருமை BSNLEUவிற்கு உண்டு. இன்று Broadband சேவைக்கு அடிப்படையான காப்பர் கேபிளை பாதுகாத்துள்ளோம்.

அது மட்டுமல்லாமல் BSNLன் நிதியை, வீண் - வெட்டி செலவு இல்லாமல் பொறுப்புடன் கையாள வேண்டும். இதற்கு மேலிருந்து கீழ் வரை அதிகாரிகளின் ஊதாரித்தனமான செலவுகள் குறைக்கப்பட வேண்டும் என்றும் தைரியமாக குரல் எழுப்பி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது BSNLEU சங்கம்.

தற்போது, நாட்டையே உலுக்கிய மகா ஊழல் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்துள்ள முறைகேட்டை அம்பலப்படுத்தி அதன் மீது

# புதிய பதவி உயர்வு

BSNL நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நீண்ட நாட்களாக புதிய பதவி உயர்வு திட்டம் வராதா? என்ற ஏக்கத்துடன் நீண்ட நாள் கனவாய் காத்திருந்தார்கள். BSNL ஊழியர் சங்கம் பதவி உயர்வில் திருப்பு முனையாக 25 வருடங்களுக்குப் பிறகு 30.10.2008 அன்று பதவி உயர்வு கொள்கைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது.

NFTE சங்கம் 50 வருடங்களுக்கு மேல் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருந்து 2 பதவி உயர்வையே (16 வருடம் கழித்து OTBP/ 26 வருடம் கழித்துBCR) பெற்றுத் தந்தார்கள். அதில் கூடுதல் இன்கிரிமெண்ட் (FR22 1(a) (i) கிடையாது. இன்றுவரை Classification உத்தரவு வந்து கொண்டிருக் கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். BSNLEU தலைமையிலான (UF) நான்கு ஆண்டு அங்கீகாரத்தில் 4 பதவி உயர்வுகள் பெற்றது. அனைத்து பதவி உயர்விற்கும் FR22 1(a) (i)..

இந்த திட்டம் அமுலானால் நம்மிடையே மிச்சமிருக்கின்ற உறுப்பினர்களையும் இழந்து விடுவோம் என்ற குறுகிய நோக்கமும், பயமும் இத்திட்டத்தை கொண்டுவரக்கூடாது என்று FNTOவுடன் கூட்டணி சேர்ந்து வேலைநிறுத்த அறைகூவல், தந்தி கொடுக்கும் போராட்டமென அறிவித்தார்கள். BSNL ஊழியர்கள் அவர்களை நிராகரித்தார்கள். விளைவு 15 தந்திகளே அகில இந்தியளவில் சென்றது. இது NFTE, FNTO கூட்டணிக்கு கிடைத்த முதல் தோல்வி.

NFTE கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றால் அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றது போல் பெற்றுத் தருவோம் என தேர்தலுக்காக கோஷம் வைத்துள்ளது. இவர்கள்தான் 2003ல் புதிய பதவி உயர்வே வேண்டாம் என ஒப்பந்தம் போட்டவர்கள். இந்த கூட்டணியை ஊழியர்களிடம் அம்பலப்படுத்த வேண்டும்.

**புதிய பதவி உயர்வின் சிறப்பு அம்சங்கள்:**

★ தேர்வுகள் இல்லாமல் பதவி உயர்வு

★ அனைத்து கேடர்களும் பயன் பெறும் வகையில்.

★ Matching Saving இல்லாமல்.

★ வேலை பளு மற்றும் பதவிகள் சரண்டர் இல்லாமல்.

★ அனைத்து பதவி உயர்வுகளுக்கும் FR22 1(a) (i).

★ JA, SA மற்றும் Liftman, Draughtsman, Civil Wing, Driver உள்ளிட்ட அனைத்து தோழர்களுக்கும் பதவி உயர்வு.

★ Non-Executive கேடர்களுக்கு இரண்டு புதிய (9200 - 250 - 13200), (9850 - 250 - 14600) ஊதிய விகிதங்கள்.

★ எந்த உரிமையையும் சலுகை களையும் இழக்கவில்லை.

★ DoTயிலிருந்து BSNLக்கு விருப்பம் கொடுத்தவர்களுக்கு 4, 7, 8, 3 என 4 பதவி உயர்வுகள்.

★ BSNLல் புதிதாக சேர்ந்தவர்களுக்கு 8, 8, 8, 8 என 4 பதவி உயர்வு கள்.

★ SC/ST தோழர்களுக்கு அதிகாரிகள் பதவி உயர்வில் உள்ளது போல இருக்கும் சட்ட உரிமையை விட்டுக் கொடுக்காமல் பெற்றது.

★ தற்போதைய உடன்படிக்கை OTBP / BCR / Gr.IV பதவி உயர்வு பயனளித்தால் அதை தொடரலாம்.

★ இந்தத் திட்டத்தினால் BSNLக்கு ஆகும் செலவு சராசரியாக வருடத்திற்கு 700 கோடி.

பகிரங்க விசாரணை தேவை என்றும் அதுவரை ஏற்கனவே கொடுத்துள்ள ஸ்பெக்டரம் ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் எனவும் குரல் கொடுத்து ஊழலுக்கு எதிராகவும் களம் இறங்கி யுள்ளது BSNLEU சங்கம். அதன் இந்த நடவடிக்கைகள் ஊழியர்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

ஊழியர் பிரச்சினைகள் மட்டுமின்றி, BSNLஐ பாதுகாப்பிலும் அதிக அக்கறை யுடன் செயல்படும் இயக்கம் BSNLEU என்று ஊழியர்கள் பாராட்டுவது நாம் எல்லோரும் அறிந்த உண்மையே!

BSNL நிறுவனத்தை நலிவடையச் செய்ய முயற்சித்ததற்கு யார் காரணம்? சாதாரண ஊழியர்களா? பொது மக்களா? சந்தாதாரர்களா? இல்லை; இல்லவே இல்லை. அரசின் தணியாத தனியார்மயக் கொள்கைகளே காரணம்!

இந்த நாசகர கொள்கைகளை அமலாக்காமல் தடுத்து நிறுத்திட தொடர்ந்து போராடி வருகிறது BSNLEU.

**BSNL நிறுவனம் நமது வாழ்வு...**

**BSNLஐ காக்க, வாக்களிப்பீர் செல் சின்னத்திற்கு...**

## நம்மை நோக்கி....

FNTO சங்கம் நமது கூட்டணியை விட்டு வெளியேறியதை அதன் மேற்கு வங்கம், சத்தீஸ்கார், உ.பி. (கிழக்கு) மாநிலத் தலைவர்கள் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

ஒரிஸா மாநிலத்தில் 200 FNTO உறுப்பினர்கள் நமது சங்கத்தில் இணைந்துள்ளனர். உ.பி. (கிழக்கு) மாநிலத்தில் கான்பூர் நகரில் 200க்கும் மேற்பட்ட BSNLWRU உறுப்பினர்கள் நம்மோடு சேர்ந்துள்ளனர். கர்நாடக மாநிலம் பெங்களூர் மாநகரத்தில் 80 FNTO தோழர்கள் நமது சங்கத்தில் இணைந்துள்ளனர். இது தொடரும்...

## சம்பள முரண்பாடு.... தீர்வை நோக்கி....

BSNL பொதுத்துறை நிறுவனமாக மாறியவுடன் புதிய சம்பள ஒப்பந்தம் 2002ல் ஏற்பட்டது. புதிய சம்பள விகிதத்தில் Point to Point முறையில் 1.10.2000 முதல் நிர்ணயம் செய்யப் பட்டது. இதன் மூலம் அனைத்து ஊழியர்களும் பயன் பெற்றனர். கூடவே சம்பள முரண்பாடு பிரச்சினையும் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மூத்த ஊழியர் களுக்கு இளையவர்க்கு இணையாக சம்பளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை BSNL நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அங்கீகாரத்தில் இருந்த NFTE சங்கமும் இது சம்பள முரண்பாடு இல்லை என்று நிர்வாகத்துடன் சேர்ந்து வாதிட்டது.

நாம் அங்கீகாரம் பெற்ற உடன் பிரச்சினையை எடுத்தோம். நம்முடைய வாதத்திற்குப் பின்னர் "சம்பள முரண் பாடு" என்பதை BSNL நிர்வாகம் ஏற்றுக் கொண்டது. சம்பள முரண்பாட்டு தீர்விற்கான தனது பரிந்துரைகளை DoT, DPE ஒப்புதலுக்கு அனுப்பியது. இது சம்பந்தமாக BSNLலே முடிவு செய்து கொள்ளலாம் என்று DoTயும் DPEயும் விளக்கமளித்து விட்டது. BSNL நிர்வாகம் உடனடியாக உத்தரவிடும்படி நமது சங்கம் வலியுறுத்தியுள்ளது. உத்தரவை எதிர்பார்க்கின்றோம்.

## தேசியக் குழு

அடுத்த தேசியக்குழு (National Council) கூட்டம் 2.12.2008 அன்று நடைபெறும். காலியாக உள்ள இடங்களில் தோழர் தீரஜ் சௌத்ரி (GS, SNATTA) மற்றும் P.V. சிவசங்கரன் (AIBCTES) ஆகியோர் ஊழியர் தரப்பு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.